

திரு.வி. க. நகர். பகுதி முன்னாள் துணைச் செயலாளர் இரா.அகத்தி தலைமையில் கழகத் தோழர்கள் பல்லாவரம் கார்த்திகேயன், பிகின் டேனியல், ராஜா சொக்கலிங்கம், ராஜன் உள்ளிட்டோர் அரியலூர் மாவட்டம் குன்னம் சட்டமன்றத் தொகுதியில் அமைச்சர் சா.சி.சிவசங்கருக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.



பரமத்திவேலூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக பொறுப்பாளரும் தி.மு.க. வேட்பாளருமான கே.எஸ்.மூர்த்தி பரமத்தி, மோகனூர், போத்தனூர், பாண்டமங்கலம் ஆகிய பேரூராட்சி பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு மக்களிடம் வாக்கு சேகரித்தார். இப்பிரச்சாரத்தில் நாமக்கல் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மகிழ் பிரபாகரன், பேரூர் கழக செயலாளர் முருகன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் கண்ணன், மாவட்டப் பொறியாளர் அணி தலைவர் அருண், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பூக்கடை சுந்தர், மாவட்ட வழக்கறிஞர்கள் அணி துணை அமைப்பாளர்கள் வக்கீல் செந்தில் குமார், வக்கீல் பாலகிருஷ்ணன், பேரூர்க் கழக அவைத்தலைவர் மதியழகன், துணைச் செயலாளர் செந்தில்நாதன் உள்ளிட்டோர் மற்றும் கூட்டணிக் கட்சி பொறுப்பாளர்கள், பேரூராட்சி கவுன்சிலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கரூர் மாவட்டம், கரூர், காந்திகிராமத்தில், கரூர் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் ஆசி.எம்.தியாகராஜனை ஆதரித்து, மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு, பரப்புரை செய்தார்.



நாமக்கல் சட்டசபை தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க.வேட்பாளரும் மகளிர் தொண்டரணி செயலாளரும், நாமக்கல் வேட்பாளருமான ப.ராணி நாமக்கல் கோட்டை திப்பு சுல்தான் ஜாமியா பள்ளிவாசலில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, நகர செயலாளர்கள், ராணா ஆனந்த், சிவக்குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் காந்தி, காங்கிரஸ் கட்சி முன்னாள் மாவட்ட தலைவர் ஷேக்நவீத் மற்றும் கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் ராமநாயக்கன் பாளையம் ஊராட்சியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியின் காங்கிரஸ் வேட்பாளர் அர்த்தனாரிக்கு கை சின்னத்திற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் டாக்டர் வே.செழியன் தலைமையில் வாக்கு சேகரித்தனர். அப்போது முன்னாள் மாவட்ட கவுன்சிலர் நல்லம்மாள், சிவாஜி, அருண்குமார், பிரபு, சிவக்குமார், செல்வம், சக்திவேல், செல்லமுத்து, சதீஷ்குமார் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் வடக்கு ஒன்றியம், மாதேப்பள்ளி ஊராட்சியில் உள்ள கிறிஸ்துவ தேவாலயத்தில் கிழக்கு மாவட்டச் செயலாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் தேர்தல் பரப்புரை மேற்கொண்டு உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்குகளை சேகரித்தார். உடன் பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், ஒன்றியக் கழகச் செயலாளர் ராஜேந்திரன், பர்கூர் பேரூர் கழகச் செயலாளர் வெங்கடப்பன், மாணவரணி அமைப்பாளர் ஜெயேந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்



தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதியின் மதசார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் சண். இராமநாதன் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டு தஞ்சாவூர் காய்கறி மார்க்கெட் பகுதியில் பிரச்சாரம் செய்தார்.



திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின், தி.மு.கழக வேட்பாளர் ந.தினேஷ்குமார் திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் கிரிக்கெட் விளையாடும் வீரர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் திருப்பூர் தெற்கு மாநகர கழகச் செயலாளர் டி.கே.டி. மு.நாகராசன் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

# கர்நாடக மாநில துணை முதலமைச்சர் சிவகுமார் பிரம்மாண்ட பேரணியுடன் பிரச்சாரம்!

## கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்,எல்,ஏ, – மேற்கு மாவட்ட செயலாளர் பிரகாஷ் எம்,எல்,ஏ, பங்கேற்பு!

*கிருஷ்ணகிரி, ஏப். 22-*

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பாக கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதிகளில் டாக்டர். செல்வகுமார், ஐஎன்டியுசி தால்வர் குப்புசாமி ஆகியோர் போட்டியிடுகின்றனர். அவர்கள் சட்டமன்ற தொகுதி முழுவதும் தீவிரமாக சுற்றுப்பயணம் செய்து வாக்காளர்களை சந்தித்து கடந்த ஐந்து ஆண்டுகளில் தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்களை எடுத்துக் கூறி கை சின்னத்திற்கு வாக்கு சேகரித்து வருகிறனர்.



இந்த நிலையில் கர்நாடக மாநில துணை முதலமைச்சர் டி.கே சிவகுமார் காங்கிரஸ் கட்சியை சார்ந்த வேட்பாளர்கள் கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் டாக்டர் செல்லக்குமார், ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் ஐஎன்டிசி தலைவர் குப்புசாமி ஆகியோரை ஆதரித்து தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார். கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி காவேரிப்பட்டினத்தில் பிரம்மாண்ட ஊர்வலமாகச் சென்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட அவர் இந்தியாவுக்கே முன்னோடியாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திகழ்கிறார். தமிழ்நாட்டில் புதிய, புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டங்கள் எல்லாம் இந்தியாவுக்கே முன் உதாரணமாக உள்ளது தற்போது தேர்தல் அறிக்கையிலும் தமிழ்நாடு முதலமைச்சர் மான்புமிகு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ள புதிய புதிய திட்டங்கள் மிகவும் பாராட்டுக்குரியதாக உள்ளது. ஆதலால் ஊத்தங்கரை காங்கிரஸ் வேட்பாளர் குப்புசாமி மற்றும் கிருஷ்ணகிரி காங்கிரஸ் வேட்பாளர் செல்வகுமாரை வாக்காளர்களாகிய நீங்கள் அனைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் தமிழ்நாடு முதலமைச்சராக அமருவதற்கு உறுதுணையாக கை சின்னத்தில் வாக்களித்து இருவரையும் வெற்றி பெறச் செய்ய வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

இந்த பிரச்சாரத்தின் போது கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ., மேற்கு மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ., தேர்தல் பொறுப்பாளர் பார். இளங்கோவன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.